செய்தி வெளியீடு எண் : 957 நாள் : 18.05.2023

**செய்தி வெளியீடு**

**விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு சில்லறை விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், பனையபட்டி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சில்லறை விற்பனை நிலையத்தில் நேற்று (17.5.2023) பட்டாசு உற்பத்தி செய்துகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் கோட்டைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தில்குமார், த/பெ. அமிர்தராஜ் (வயது 35) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

•••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in